# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
## SECOND YEAR EXAMINATIONS IN BUSINESS ADMINISTRATION (EXTERNAL) – 2006 / 2007
## Held in May 2007
## BBA 26 – MANAGERIAL ECONOMICS

எல்லா வினாக்களுக்கும் விடை தருக. நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) முகாமைத்துவப் பொருளியல் என்றால் என்ன? (02 புள்ளிகள்)

ஆ) "முகாமைத்துவ தீர்மானமானங்களை மேற்கொள்ளும்போது வியாபார நிறுவனங்களினால் பல அடிப்படைப் பொருளாதார எண்ணக்கருக்கள் பயன்படுத்தப்படுகின்றன". எவ்வாறு அடிப்படைப் பொருளாதார எண்ணக்கருக்கள் வியாபார நிறுவனங்களுக்கு பிரயோகிககப்பட முடியும் என்பதனை சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

இ) நீர் பின்வரும் ஏதாவது நிறுவனம் ஒன்றிற்கு விலையிடல் தீர்மானம் மேற்கொள்ளும் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளீர் என கருதிக்கொள்க.

| நிறுவனம் | உற்பத்தி |
|---|---|
| ஹீரோ ஹொண்டா | மோட்டார் சைக்கிள் |
| ரெயின்கோ (Pvt) Ltd. | குடை |
| XYZ கம்பனி | பெனடோல் |
| ABC திரைப்பட கம்பனி | திரைப்படம் |
| ஹானிம் கம்பனி | உரம் |
| ICL வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் | ப்பிளக் நைற் பவுடர் |
| யுனி லிவர் (Pvt) Ltd. | லக்ஸ் சோப் |
| டோக்கியோ கம்பனி.(Lanka) Ltd. | சீமெந்து |

நீர் தெரிவு செய்த பொருளுக்கு விலை நிர்ணயம் எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதனை உற்பத்தி வாழ்க்கை வட்ட மாதிரியைப் (Product Life Cycle model) பயன்படுத்தி விளக்குக.

(08 புள்ளிகள்)

02. அ) "சந்தைக் கேள்வி எதிர்வு கூறல்" என்பதனால் நீர் விளங்கிக் கொள்வது யாது? (03 புள்ளிகள்)

ஆ) இன்றைய வியாபார நிறுவனத்தில் கேள்வி எதிர்வு கூறலின் முக்கியத்துவத்தையும் பொருள் எதிர்வு கூறலின் அவசியத்தையும் சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

இ) உற்பத்தியாளர் பொருட்களுக்கான கேள்விக்கும், நுகர்வோர் பொருட்களுக்கான கேள்விக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குக.

(02 புள்ளிகள்)

ஈ) கேள்வி எதிர்வு கூறலுக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற முறைகள் யாவை? (02 புள்ளிகள்)

உ) குறிப்பிட்ட ஒரு கம்பனியினால் விற்பனை செய்யப்பட்ட பேனாக்களின் விலைகள் மற்றும் தொகைகள் என்பனவற்றை பின்வரும் தகவல்கள் காண்பிக்கின்றன.

| ஆண்டு | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| விலை(ரூபா) | 8 | 4 | 8 | 16 | 20 | 16 | 12 | 32 | 24 | 20 |
| தொகை (000அலகுகள்) | 36 | 40 | 32 | 28 | 20 | 24 | 32 | 12 | 16 | 28 |

மேற்படி தரவுகளுக்கு பிற்செலவுக் கோட்டைப் பொருத்துவதுடன் 2006ம் ஆண்டில் பேனா ஒன்றினது விலை ரூபா 14 ஆக காணப்படுகையில் பேனாக்களுக்கான கேள்வியின் அளவுகளை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

03)

அ) சமபயன் வளையியை வரைவிலக்கணப்படுத்துவதுடன் சமபயன் வளையியின் பண்புகளையும் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

ஆ) வெளிப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வுக் கோட்பாட்டுக்கிணங்க வரைபடங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பதிலீட்டு விளைவு, வருமான விளைவு, மொத்த விளைவு என்பனவற்றை விளக்குக.

(06 புள்ளிகள்)

இ) Q1, Q2 ஆகிய பொருட்களுக்கான ஒரு நுகர்வோனின் பயன் சார்பு பின்வருமாறு:

U = Q11/2 Q21/2

வரவு செலவுத்திட்ட வரையறை

M = P1 Q1 + P2 Q12

இங்கு U = பயன் M = நுகர்வோனது வருமானம்
P1 = Q1 இனது விலை P2 = Q2 இனது விலை

Q1, Q2 ஆகிய பொருட்களை தெரிவு செய்வதன் மூலம் நுகர்வோனது பயன் உச்சப்படுத்தப்படுகின்றது எனக்கொண்டு.

ஈ) Lagrangian Multiplier Technique ஆய்வைப் பயன்படுத்துவதன் மூலம் Q1 , Q2, ஆகிய பொருட்களுக்கான மார்சலினது கேள்விச் சார்பைப் பெறுக.

(06 புள்ளிகள்)

உ) மேலே பெறப்பட்ட கேள்விச் சார்பைப் பயன்படுத்துவதன் மூலம் Q1, Q2 ஆகிய பொருட்களின் விலைகள் முறையே ரூபா. 100/-, 50/- எனவும், நுகர்வோனின் செலவிடத்தகு வருமானம் ரூபா 2000/- எனவும் கருதிக்கொண்டு Q1, Q2 ஆகிய பொருட்களுக்கான உத்தம சேர்க்கையை மதிப்பிடுக.

04 புள்ளிகள்)

04)

அ) "கெயின்ஸினது சிறிய திறந்த பொருளாதார மாதிரியை விட மண்டல - பிளேமிங் மாதிரியானது கூடுதலான தகவல்களை வழங்குகின்றது". மேற்படி கூற்றை கருத்துரைக்குக.

(12 புள்ளிகள்)

ஆ). வெளிநாட்டு நாணய மாற்று வீதம்

| வருடம் | 1995 | 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| US டொளர் | 54.0 | 56.7 | 61.2 | 67.8 | 72.1 | 75.78 | 89.36 | 95.66 | 96.52 | 101.19 | 100.50 |
| ஸ்டேர்லிங் பவுண் | 84.2 | 95.9 | 101.6 | 112.6 | 116.7 | 114.78 | 128.66 | 143.74 | 157.71 | 181.35 | 182.87 |
| இந்திய ரூபா | 1.54 | 1.58 | 1.58 | 1.56 | 1.66 | 1.68 | 1.89 | 1.97 | 2.07 | 2.23 | 2.28 |

(இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 1995 - 2005)

மேற்படி தகவல்களைக் கருத்திற் கொண்டு இலங்கையின் பொருளாதார உறுதி தொடர்பான உமது கருத்தை விளக்குக.

(04 புள்ளிகள்)

இ) நேரடி வெளிநாட்டு முதலீடு என்னும் பதத்தை வரையறை செய்து இலங்கையில் அதனது நன்மைகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

05) அ) உற்பத்தி தொழிற்பாடு என்னும் எண்ணக்கருவை விளக்குக.? (02 புள்ளிகள்)

ஆ) கொப் - டக்ளஸ் உற்பத்திச் சார்பின் சிறப்பம்சங்களையும், குறைபாடுகளையும் சுருக்கமாக விளக்குக.

(02 புள்ளிகள்)

இ) பின்வரும் கொப் - டக்ளஸ் உற்பத்திச் சார்பைக் கருத்திற் கொள்க.

$$Q = AL\alpha\ K\beta$$

பின்வருவனவற்றைக் காண்க.

i) உற்பத்திக் காரணிகளின் சராசரி உற்பத்தி
ii) உற்பத்திக் காரண்களின் எல்லை உற்பத்தி
iii) உற்பத்திக் காரண்களின் நெகிழ்ச்சி
iv) காரணிகளின் எல்லைத் தொழில் நுட்ப பதிலீட்டு வீதம்

(04 புள்ளிகள்)

ஈ) இரண்டு உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி உற்பத்தியை மேற்கொள்ளும் ஒரு நிறுவனத்தின் உற்பத்திச் சார்பு பின்வருமாறு:

$$Q = 1000F10.75\ F20.25$$

வரையறை சார்பு $C = P1\ F1 + P2\ F2$

**இங்கு**

F1, F2 = உற்பத்திக் காரணிகள்
P1, P2 = உற்பத்திக் காரணிகளின் விலைகள்

i) F1, F2 காரணிகளின் கேள்விச்சார்பைப் பெறுக

(03 புள்ளிகள்)

ii) P1 = 100/= எனவும், P2 =.200/= எனவும் மொத்த உற்பத்திக்கான செலவு 20000/= எனவும் கொண்டு F1,F2 காரணிகளின் அளவினையும், உத்தம வெளியீட்டு மட்டத்தினையும் காண்க.

(03 புள்ளிகள்)

iii) இப்பொழுது உற்பத்திக் காரணிகளின் விலைகள்

P1 = 75/=
P2 = 150/=

ஆகவும், உற்பத்திக்கான செலவில் மாற்றம் இல்லை எனவும் கருத்திற் கொண்டு F1 , F2 காரணிகளின் அளவினையும, உத்தம வெளியீட்டு மட்டத்தினையும் காண்க.

(03 புள்ளிகள்)

iv) வினா (iii) இல் பெறப்பட்ட விடைகளை பாவித்து இந்நிறுவனம் சந்தைச் சூழலில் நிலைத்து நிற்குமா? இல்லையா? என்பதனைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

(03 புள்ளிகள்)

***